


தென்காசி, இராமநாதபுரம் மாவட்டங்களில் இன்று மற்றும் நாளை நடைபெறவுள்ள அரசு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவுள்ளதையொட்டி நேற்று (28.10.2025) மதுரை வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விமானநிலையத்தில் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### இலட்சக்கணக்கான பயனாளிகள் பயன்பெறும் வகையில்

# தென்காசியில் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வழங்குகிறார்!

தென்காசி.அக்.29-

திராவிட மாடல் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள் இன்று (29ஆம் தேதி) தென்காசியில் நடைபெறும் அரசு நிகழ்வில் பங்கேற்று லட்சக்கணக்கான பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிக்கிறார்கள்.

முதலமைச்சர் அவர்களுக்கு இன்று தென்காசி செல்லும் வழியில் காலை 830 மணி அளவில் ஆலங்குளத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் தலைமையில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் இன்று (29 ஆம் தேதி)முக்கூடல் அரியநாயகிபுரத்தில் இருந்து காலையில் புறப்பட்டு தென்காசியில் அரசு விழா நடைபெறும் தென்காசி விளக்கு ஆய்க்குடி சாலை நல்லமணி கல்லூரிக்கு பின்புறம் தென்காசி மங்கம்மா சாலை சந்திக்கும் பகுதியில் அமைந்துள்ள ஜாஸ் ஸ்மார்ட் சிட்டி மைதானத்திற்கு வரும் வழியில் நெல்லை மேற்கு மாவட்டம் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நெல்லை மேற்கு மாவட்டம் ஆலங்குளம் தொகுதி,தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசி, கடையநல்லூர் தொகுதிகள், தென்காசி வடக்கு மாவட்டம் வாசுதேவநல்லூர், சங்கரன்கோவில் தொகுதிகள் ஆகிய கழக மாவட்டங்களை உள்ளடக்கிய 5 சட்டமன்ற தொகுதிகள் சார்பில் சுமார் 25000 பேர்கள் கலந்து கொண்டு சிறப்பான மற்றும் உற்சாகமான வரவேற்பு னநகழ்ச்சி.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தலைமையில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன்,தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. தொடர்ந்து அடுத்தடுத்து சிறப்பான வரவேற்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதில் கழக நிர்வாகிகள்,கழக தொண்டர்கள் திரளாக கலந்து கொள்கின்றனர்.முதலமைச்சர் அவர்களை உற்சாகமாக வரவேற்கும் அடிப்படையில் தென்காசி மாவட்டம் முழுவதும் சாலையின் இரு புறங்களும் கழக இரு வண்ணக் கொடிகள்,அரசின் திட்டங்களை விளக்குகின்ற வகையில் விளம்பர பதாகைகள் வைக்கப்பட்டுள்ளது.

திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் காலை 11 மணியளவில் தென்காசி மாவட்டம் சீவநல்லூர் சென்று அங்கு கலைஞர் அவர்களின் கனவு இல்லம் திட்டத்தை தொடங்கி வைத்துவிட்டு 11.15 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு

அரசு விழா நடைபெறும் ஆய்க்குடி சாலை நல்லமணி கல்லூரிக்கு பின்புறம் தென்காசி மங்கம்மா சாலை சந்திக்கும் பகுதியில் அமைந்துள்ள ஜாஸ் ஸ்மார்ட் சிட்டி மைதானத்திற்கு வருகிறார்கள்.

“சொன்னதைச் செய்வோம்” “செய்வதைத்தான் சொல்லுவோம்”என்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பொன்மொழிக்கிணங்க “எல்லோர்க்கும் எல்லாம்” என்ற அடிப்படையிலும், முடிவுற்ற அரசு திட்டப் பணிகளை தன்னுடைய திருகரங்களால் துவக்கி வைத்தும்,புதிய திட்டப் பணிகளை அறிவித்தும்,விழாவில் சிறப்பான பேருரை யாற்றி சிறப்பிக்கிறார்கள்.

விழா நடைபெறும் ஜாஸ் ஸ்மார்ட் சிட்டி மைதானம் தென் மாவட்டங்களில் முதன்முறையாக ஜெர்மன் தொழில்நுட்ப தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. பந்தலை சுற்றி காம்பவுண்ட் சுவர் போன்று தடுப்புகள் அமைக்கப்பட்டு அவற்றில் அரசின் சார்பில் 50 க்கும் மேற்பட்ட திட்டங்கள் பட காட்சிகளுடன் விளக்கும் வகையில் விளம்பரங்கள் இடம் பெற்றுள்ளது.

மேலும் 25,000 பேர்கள் அமரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

பின்னர் முதலமைச்சர் அவர்கள் பகல் 12.30 மணியளவில் அங்கிருந்து புறப்பட்டு 12.45 மணிக்கு ஆய்குடி அமர்சேவா சங்கம் செல்கிறார்கள்.

அதன் பின்னர் அங்கிருந்து 1.30 மணி அளவில் புறப்பட்டு

குற்றாலம் சுற்றுலா மாளிகை சென்று தங்குகிறார்கள்.

பின்னர் மாலை 5 மணி அளவில் முதலமைச்சர் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு மதுரை சென்று இரவு தங்குகிறார்கள்.

நாளை காலை (30.10.2025) அன்று முதலமைச்சர் அவர்கள் 7.45 மணிக்கு கோரிப்பாளையம் சென்று அங்கு தேவர் அவர்கள் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி விட்டு, 8 மணிக்கு தெப்பக்குளம் சென்று அங்கு மருது பாண்டியர் அவர்கள் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி விட்டு,

அதன் பின்னர் அங்கிருந்து 8.10 மணிக்கு புறப்பட்டு 9.30 மணிக்கு இராமநாதபுரம் மாவட்டம் கமுதி பசும்பொன் சென்று அங்கு தேவர் அவர்களின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்துகிறார்.

பின்பு மதுரை சென்று விமானம் மூலம் சென்னை வருகிறார்.

### நம் திட்டத்தையும் – இலக்கையும் கழகத்தினரிடம் கொண்டு செல்லுங்கள்!

# களப்பணியில் கலைஞரின் உடன்பிறப்புகளை வெல்ல எவரும் இல்லை என காட்ட வேண்டிய தருணம் இது!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக்.29-

கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

களப்பணியில் கலைஞரின் உடன்பிறப்புகளை வெல்ல எவரும் இல்லை எனக் காட்ட வேண்டிய தருணம் இது...

இன்று நாம் வகுத்த திட்டத்தையும், நிர்ணயித்துள்ள இலக்கையும், எனது MESSAGEஐயும் தமிழ்நாடெங்கும் உள்ள நமது கட்சியினரிடம் சென்று சொல்லுங்கள்.

‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ என நம் ஒவ்வொருவரின் வாக்குச்சாவடியிலும் வெல்வோம்! ஏழாவது முறை வாகை சூடி வரலாறு படைப்போம்!

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டா லின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.





தென்காசி மாவட்டம்

ரூ.1,020 கோடியில்

முடிவுற்ற பணிகளைத் திறந்துவைத்தல்

புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

மற்றும்

அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

தலைமை

திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

நாள் : 29.10.2025, புதன்கிழமை, நேரம் : காலை 11.30 மணி, இடம் : தென்காசி



மாவட்ட மைய நூலகம், தென்காசி.



மகப்பேறு மையம் மற்றும் குழந்தைகள் நல கட்டடம், தென்காசி.



அரசு மேல்நிலைப் பள்ளி வகுப்பறைகள், மாறாந்தை.



சார்பதிவாளர் அலுவலகம், புளியங்குடி.

செ.ம.தொ.இ/1279/வரைகலை/2025

தென்காசி மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் திராவிட மாடல் அரசின் சாதனைகள்

ரூ.22,912 கோடியில் 6,03,246 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

ரூ.2,074 கோடியில் 37,221 வளர்ச்சித் திட்டப் பணிகள்

மொத்தம் ரூ.24,986 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மற்றும் வளர்ச்சித் திட்டப் பணிகள்

எல்லார்க்கும் எல்லாம் !

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-600 009